பெயர்__________ தேதி __________

# சினம் தவிர்



அது ஒரு அடர்ந்த காடு. அந்த காட்டில் பல மிருகங்கள் வாழ்ந்து வந்தன. ஒரு நாள் யானை, தன் குட்டியுடன் தண்ணீர் குடிப்பதற்காக அருவியை நோக்கிச் சென்று கொண்டு இருந்தது. அந்த சமயம் பன்றிக் கூட்டங்கள் சேரும் சகதியுமாக வந்து கொண்டு இருந்தன. யானை அவைகளுக்கு வழி விட்டு ஒதுங்கி நின்றது. அதனைக்கண்டு 'ஹ..ஹா..!



யானை கூட நம்மைப் பார்த்து பயப்படுகிறது பார்த்தாயா? என்று பன்றி உறுமியது. அதைக்கேட்டு யானை சிரித்தது.

இக்கதை பெரியவர்கள் சிறியவர்களின் செயலை விளக்குகிறது. சிறியவர்களின் அறியாமை கண்டு பெரியவர்கள் தங்களுக்குள் நகைத்துக் கொள்வர். கோபம் கொள்ள மாட்டார்கள்.

பெயர்__________ தேதி __________

# சினம் தவிர்

**பயிற்சிகள்:**

<u>கோடிட்ட இடத்தை நிரப்புக:.</u>

அ. ---------- தன் குட்டியுடன் தண்ணீர் குடிக்க அருவிக்குச் சென்றது.

ஆ. பன்றி ----------, ---------- இருந்தது.

இ. வழி விட்டு ஒதுங்கியது -------------.

ஈ. உறுமிய விலங்கு ----------.

<u>எதிர்ச்சொல்:-</u>

அ. வாழ்ந்தது x

ஆ. சிரித்தது x

இ. வந்தன x

ஈ. அறியாமை x

<u>வினாக்கள்:-</u>

பெரியவர்கள் சிறியவர்களின் குணங்களை யானை, பன்றி கதையுடன் ஒப்பிட்டு எழுது.